முத்தமிழ் ஆய்வு மன்ற முழுமணிச் சொற்கள்



தமிழ்த்தொண்டர் கோ. முத்துப்பிள்ளை

முத்தமிழ் ஆய்வுமன்ற
முழுமணிச் சொற்கள்

தொகுப்பு ஆசிரியர்:

ஆட்சிமொழி அறிஞர், தமிழ்த் தொண்டர்

கோ. முத்துப்பிள்ளை

மூவேந்தர் பதிப்பகம்

73, சீனிவாசபெருமாள் சன்னதி முதல் தெரு,

இராயப்பேட்டை, சென்னை - 600 014.

நூல் விவரப் பட்டியல்

நூல்	:	முத்தமிழ் ஆய்வு மன்ற முழுமணிச் சொற்கள்
ஆசிரியர்	:	கோ. முத்துப்பிள்ளை
நூல் வகை	:	ஆய்வுக் கட்டுரைகள்
உரிமை	:	ஆசிரியருக்கு
முதல் பதிப்பு	:	செப்டம்பர், 2008
பக்கங்கள்	:	80
நூல் அளவு	:	1 X 8 கிரவுன் 12.5 X 18.5 செ.மீ
தாள்	:	11.2 கி.கி. வெள்ளைத் தாள்
எழுத்து அளவு	:	12 புள்ளிகள்
அச்சுக்கோவை	:	ஸ்ரீ டிசைன்ஸ், மயிலை, சென்னை-4. செல்: 9444 779 532
கட்டமைப்பு	:	சாதா கட்டமைப்பு
வெளியீடு	:	மூவேந்தர் பதிப்பகம், 73, சீனிவாச பெருமாள் சன்னதி முதல் தெரு, இராயப்பேட்டை, சென்னை - 14
அச்சிட்டோர்	:	மூவேந்தர் அச்சகம், இராயப்பேட்டை, சென்னை - 14
விலை	:	ரூ. **25.00**

முன்னுரை

ஆட்சி மொழிக் காவலர் கி. இராமலிங்கனார் அவர்களின் அடிச்சுவட்டைப் பின்பற்றி ஆட்சிமொழி சொற்களை அடியேன் உருவாக்கி வருகின்றேன். 1942 ஆம் ஆண்டு தலைமைச் செயலகப் பணியில் நான் சேர்ந்த நாளிலிருந்து இந்தச் சொல்லாக்கப் பணியில் முழு ஈடுபாட்டுடன் உழைத்து வருகிறேன். முத்தமிழ் ஆய்வு மன்ற உறுப்பினர்களின் துணையோடும் பிற அறிஞர் பெருமக்களின் நல்லாதரவுடனும் சொற்களை அமைக்கும் பணியினை இடையறாது செய்து வருகிறேன். எனக்கு உதவி புரிந்துள்ள எல்லா நண்பர்களுக்கும் இந் நேரத்தில் என் நெஞ்சார்ந்த நன்றியை உரித்தாக்கிக் கொள்கின்றேன்.

தமிழ் நாட்டு அரசின் சார்பாக தமிழ்வளர்ச்சித்துறை நிறுவப்பெற்றபோது என்னை அத்துறைக்குத் தேர்ந்து எடுத்து, ஊக்கப்படுத்தி, தமிழ் உலகத்திற்கு என்னை அறிமுகம் செய்து வைத்த தமிழ்நாட்டரசின் மேனாள் ஆய்ந்துரைஞர் மேதகு வே. கார்த்திகேயன் இ.அ.ப. அவர்களுக்கு நான் என்றும் கடமைப்பட்டுள்ளேன்.

மிகப் பெரும்பாலான புதிய சொற்கள் நடை முறைக்கு ஏற்கனவே வந்துள்ளன. அவற்றையெல்லாம்

இந்நூலில் சேர்க்கவில்லை. புதிய சொற்களையும், வலியுறுத்தப்பட வேண்டிய மறந்துபோன சொற்களையும் இந்நூலில் சேர்த்துள்ளேன்.

குறிப்பாக இந்நூல் உருவாக உடன் இருந்து உதவிய எனது நண்பர் பொறியியல் அறிஞர் கி. இராசாராம், கரந்தைத் தமிழ்ச் சங்க மேனாள் செயலாளர் செந்தமிழ்ச் செயல் வீரர் த.கோ.ப. கோவிந்த சாமி ஆகியோருக்கு எனது சிறப்பான நன்றியை உரித்தாக்குகிறேன்.

இலக்கியச்சுடர் மூவேந்தர்முத்து அவர்களை நான் கடந்த 25 ஆண்டுகளாக நன்கு அறிவேன். மிகச் சிறந்த பண்பாளர் ஆகிய அவர், பிறர் நலன் பேணும் பெருந் தகையாளர் ஆவர். அவர் இந்நூலை ஏற்று மனமுவந்து தம்முடைய பதிப்பகத்தின்வாயிலாக தம் பொறுப்பில் வெளியிட முன்வந்துள்ளமைக்கு நன்றி நவில சொற்களே கிடைக்கவில்லை.

வாழ்க மூவேந்தர் முத்து.

வணக்கம்.

தமிழ்த் தொண்டர்

கோ.முத்துப்பிள்ளை



இலக்கியக் கடல் முனைவர்
சு. சிலம்பொலி செல்லப்பனார்,
பெசன்ட் நகர், சென்னை - 91.

வாழ்த்துரை

அருமைப் பெரியவர் தமிழ்த்தொண்டர் கோ. முத்துப் பிள்ளை அவர்கள் தமிழ்ச் சொல்லாக்கப் பணியில் ஒரு வாழ்நாள் சாதனையாளர் ஆவார். பள்ளியிலும் கல்லூரியிலும் நன்கு பயின்று வந்த இவர் சொல்லாக்கப் பணியில் ஈடுபட்டார். தலைமைச் செயலகப் பணியில் சேர்ந்த பிறகு சொல்லாக்கப் பணியில் முழு நேரமாக ஈடுபட்டார் என்றுதான் சொல்ல வேண்டும். தனக்கே உரித்தான தனி முத்திரை பதித்த சொல்லாக்கங்களை இவர் நிறைய செய்து உள்ளார். அவற்றை இந்நூலில் நன்கு கண்டு களிப்படையலாம். இவருடைய இனிமையும், எளிமையும் அடக்கமும் மனிதநேயப் பண்பாடும் போற்றத்தக்கன. நிறைவான பணிகளை ஆற்றி உள்ள இவர் நீடூழி வாழ்கவென வாழ்த்துகிறேன்.

- சு. சிலம்பொலி செல்லப்பனார்

பொருளடக்கம்

1. முத்தமிழ் ஆய்வு மன்ற முழுமணிச் சொற்கள் 7

2. உதிர்ந்த மலர்கள் 27

முத்தமிழ் ஆய்வு மன்ற முழுமணிச் சொற்கள்

Absentee Land Lord	-	செல்லா நிலக்கிழார்
Accident	-	அதிரிடர்
Act	-	செய்சட்டம்
Adamant	-	ஒட்டாரம்
Adoption	-	மகன்மை கொள்ளுதல் (தத்தெடுத்தல்)
Advantage	-	ஆய பயன்
Adviser	-	ஆய்ந்துரைஞர்
Aerial	-	ஈர்ப்புக் கம்பி
Agenda	-	நிகழ்ச்சிப் பட்டியல்
Agreeable Diet	-	பொருந்தும் உணவு
Agreement	-	உடன்பாடு
Agencies	-	முகமையர்
Air Ambulance	-	மருத்துவ வானூர்தி
Air Condition	-	வளிச் சீர்மை

Alarm Time Piece	-	எழுப்பு மணிப்பொறி
Album	-	படத்தொகுப்பம்
Allergy	-	ஒவ்வாமை
Amusement Park	-	பொங்கு உவகைப்பூங்கா
Antenna	-	கவர் கம்பி
Anti Biotic	-	எதிர் உயிர் கொல்லி
Apple	-	சீமை பேரி
Armour	-	மெய்ம்மறை
Aspiration	-	உயர்வுள்ளல்
Attention	-	நிமர்ந்து நில்
Attestation	-	சான்றொப்பம்
Auto	-	தானி
Autograph	-	வாழ்த்தொப்பம்
Bakery	-	அவிமனை
Balcony	-	முகப்பு மாடம்
Banner	-	பெயர்ச்சீலை
Bar	-	அருந்தகம்
Bifurcation	-	இருகூறாக்கல்
Bill	-	வடிவுச் சட்டம்

Binding wire	-	கட்டுக் கம்பி
Bio-data	-	தன் விவரக் குறிப்புகள்
Biscuit	-	மென் பண்டம்
Blood Group	-	குருதி வகை
Blood Pressure	-	குருதிக் கொதிப்பு
Bogey	-	பூச்சாண்டி
Bonafide	-	மெய்யான
Bonus	-	மகிழ்வூதியம்
Boon	-	அருட்கொடை
Booster	-	வலிமைப் பெருக்கி (பெருக்களம்)
Botheration	-	சிறு தொல்லை
Bounced Cheque	-	மதிப்பிழந்த காசோலை
Brain Wash	-	உரையேற்றுதல்
Brief Case	-	குறும் பேழை
Buffet	-	பரப்புணவு
Bun	-	மென்னப்பம்
Buzzer	-	இமிரி
Bureau	-	நிலையகம்
Cabinet Maker	-	கலைக்கலன் செய்பவர்

Cable Car - வட ஊர்தி
Call Taxi - அழைப்புச் சீருந்து
Cancellation - அற்றம் செய்தல்
Canopy - மேலாப்பு
Cake - இனிப்பு அப்பம்
Canteen - அலுவலக உணவகம்
Carry Bag - ஏந்து பை
Cartoonist - பகடிப்படம் வரையுனர்
Case Sheet - நோயாளர் குறிப்பேடு
Cell - சிற்றம் (சிறு குழு)
Cell Phone - செல்வழிப் பேசி
Charisma - மனங்கவர் மாண்பு
Chordless Phone - கைவழிப் பேசி
Circus - அருந்திறல் அரங்கு
Cloning - உயிர்ப் போலிகை
Clinic - மருத்துவக் கூடம்
Clue - சுவடு
Colleague - உடனூழியர்
Contract - ஒப்பந்தம்
Coma - உணர்வறு உறக்கம்

Co-Brother	-	உடன் மருகர்
Code	-	தொகுப்புச் சட்டம்
Commitment	-	ஏற்பிசைவு
Co-option	-	தேர்வினைப்பு
Common Law	-	எழுதாச்சட்டம்
Compact Disc	-	செறிவு வட்டு
Cold	-	நீர்க்கோவை
Complex	-	இணைவம்
Complication	-	குறுக்கிடு நோய்
Consultant	-	கருத்தளிக்குநர்
Consulting Room	-	மருத்துவக் காண்பகம்
Container	-	சரக்குப் பெட்டகம்
Contention	-	நிலைக்கூற்று
Conservative	-	பழைமை விரும்பி
Conveyor Belt	-	செலுத்துப் பட்டை
Covered	-	கவரப்பட்ட
Counter	-	முகப்பிடம்
Courier	-	நேரஞ்சல்
Courtesy Call	-	அன்புக் காணல்

Cousin	-	ஒன்றுவிட்ட உடன் தோன்றல்
Cut - Out	-	காட்சிப் பேருரு
Cut Service	-	குறைப்புச் சேவை
Counselling	-	சேர்ப்பு அறிவுரை
Dais	-	கூட்ட மேடை
Dark colour	-	அடர் நிறம்
Dark Room	-	இருளறை
Deviation	-	பிறழ்வு
Dean	-	கலைப்புல முதல்வர்
Decade	-	பதிற்றாண்டு
Decency&Decorum	-	பண்பும் பாங்கும்
Delay	-	நெடுநீர்மை (சுணக்கம்)
Delegate	-	பேராளர்
Deluxe	-	உயர்வகை
Diagnosis	-	கண்டறிகை
Dialtone	-	இயம்பொலி
Dictation	-	எழுத நவில்கை
Dietician	-	உணவு வகைப்படுத்துநர்

Diploma - பட்டிகைப் படிப்பு
Do's and Dont's - செய்வன தவிர்வன
Dowry - வரன்தொகை
Draft - வரைவுக் காசோலை
Dummy - பேதை
Dynamo - மின்னாக்குப் பொறி
E-mail - மின்னணு அஞ்சல்
Ear Mark - வரைந்து வைத்தல்
Earthing - தரையிடல்
Efficiency - திறப்பாடு
Ego - தற்கோள்
Electricals - மின் கருவியகம்
Electric Cardiograph - இதய மின்னலை வரை படம்
Epilespsy - வலிப்பு நோய்
Eyes-Left - இடம் பார்
Eyes-Right - வலம் பார்
Emergency Lamp - நெருக்கடிநேர விளக்கு
Emotion - உணர்ச்சிப் பிழம்பு
Enactment - இயற்றுச் சட்டம்

Encomium - புகழாரம்
Esclator - ஓடு படி
Estate - நில வளாகம்
Eve-teasing - பாலினக் குறும்பு
Eulogy - மெய்ப்பு
Evolution - படிமுறை வளர்ச்சி
Ex-Gratia Payment - பரிவுத்தொகை
Exhaust - Fan - வெளியேற்று
மின்விசிறி
Fall - in - அகம் சேர்
Fall - out - புறம் போ
Farewell Party - விடைதரு விழா
False Ceiling - ஒப்பனை மூட்டம்
Favourtism - காதன்மை
Fax - பாய்வு நகல்
Filter Coffee - வடித்த காநீர்
Flame - தீக்கொழுந்து
Flash News - பாய்வுச் செய்தி
Flexible Cable - துவன் வடம்
Foot-Board - மிதிப் படி

Freelance writer - தன்னிலை எழுத்தாளர்

Frequancy - நிகழ்வு இடைவெளி

Fund - நிதியம்

Furniture - அறைகலன்

Fuse Wire - உருகிக்கம்பி

Gentlement's Agreement - விழுமியார் உடன்பாடு

Get to-gether - உவப்பத் தலைகூடல்

Glare - கூசொளி

Good Name - திருப்பெயர்

Good Signature - செல்லத்தக்க கையொப்பம்

Good will - வணிக நற்பெயர்

Grand Father - பாட்டனார்

Great Grand Father - பூட்டனார்

Great Great Grand Father - ஓட்டனார்

Grievance - மனக்குறை

Ground support - தள ஆயத்தம்

Group Photo	-	தொகை நிழற்படம்
Guardian	-	முதுகண்
Handicap	-	தடைப்பாடு
Heartwood	-	வைரக்கட்டை
Heir	-	வழியர்
Helicopter	-	வான்சிவிகை
Helmet	-	தலைக்காப்பு
HighLight Scenery	-	மான்சீர் காட்சிகள்
Hobby	-	விழைவு வினை (விழைவம்)
Hotline Telephone	-	நேரியங்குத் தொலைப்பேசி
House surgeon	-	மனை மருத்துவர்
Humidity	-	ஈரச்செறிவு
Hurricane Lamp	-	புயல் விளக்கு
Illumination	-	ஒளிவிளக்கு ஒப்பனை
Image	-	புகழுரு
Immunity	-	ஏமம்
Inclination	-	இயல்பு மனப்போக்கு

Initiative	-	தொடங்கு திறன்
Indisposition	-	நலிவுற்ற நிலை
Innocence	-	ஏதுமறியாமை
Insulation	-	மின்காப்பு
Instruction	-	அறிவுறுத்தம்
Intercom	-	உள்ளிடப்பேசி
Interior Decoration	-	மனையக ஒப்பனை
Intuition	-	உள்ளுணர்வு
Iron Box	-	தேய்ப்புப் பெட்டி
Jack Pot	-	பந்தயப் பொற்கிழி
Jewellery	-	நகையகம்
Jockey	-	உயர்த்துக கருவி
Juice Centre	-	கனிச்சாறு கடை
Jumper	-	கட்டடத் துளையுளி
Junior	-	இளவர்
Law	-	நாட்டுச் சட்டம்
Land Mark	-	நில வரை
Lapse	-	இழுக்கம்
Level Ground	-	தன் தரை (சம தரை)

Legislation	-	படைப்புச் சட்டம்
Leading Question	-	விடையமை வினா
Living Legend	-	மங்கா புகழ் மா மனிதர் (வாழும் வாகையர்)
Libel	-	எழுத்து - வழி அவதூறு
Location	-	அமைவிடம்
Lump sum	-	திரட்சித் தொகை
Magic	-	செப்படி வித்தை
Maiden Attempt	-	கன்னி முயற்சி
Mailing List	-	அஞ்சலனுப்புகைப் பட்டியல்
Main Road	-	தலைமைச் சாலை
Malice	-	காழ்ப்புணர்ச்சி
Manners	-	பழகும் பாங்கு
Matricuation School	-	பதின்நிலைப் பள்ளி
Mechanic	-	எந்திரர்
Medicals	-	மருந்துக்கடை
Megacity	-	மாப்பெரு நகர்
Memento	-	நினைவுப்பரிசு

Mental Agony	-	மன உளைச்சல்
Mentor	-	நல்லாசான்
Mesmerism	-	முகமாற்று
Mess	-	அடிசிலகம்
Messenger	-	செய்தி கொணர்பவர்
Metal Detector	-	உலோக உணர்வி
Millennium	-	நல்லாயிரம்
Minus Point	-	குறைவுக் கூறு
Mimicry	-	பலகுரல் கலை
Mood	-	மனவோட்டம்
Money Purse	-	காசு உறை
Motel	-	உந்துணவகம்
Moving Space	-	நடவை
Mud Guard	-	மட்காப்பு
Non-Committal Reply	-	பிடிகொடா விடை
Numerology	-	எண் கணியம்
No Due Certificate	-	நிலுவை இல்லா சான்றிதழ்
Obligation	-	கடப்பாடு
Omission	-	செய்தக்க செய்யாமை

Opportunity	-	செவ்வி
Opthalamic Ward	-	கண்ணியல் பகுதி
Optimism	-	ஆர்வ மனப்பான்மை
Outright Sale	-	அறவிலை
Pay Order	-	கொடுப்பு ஆணை
Paper Weight	-	காகிதக் காப்பு
Passage	-	உரைப்பகுதி
Pass Book	-	கைச்சிட்டை
Pedestal Fan	-	அடிப்பீட மின்விசிறி
Perfect Market	-	நிறைசீர் அங்காடி
Pessimism	-	சோர்வு மனப்பான்மை
Pilot	-	வலவன்
Plan	-	அமைதிட்டம்
Platform	-	நடைமேடை
Plaza	-	அங்காடி வளாகம்
Plus Point	-	கூடுதல் சிறப்பு
Podium	-	உரை மேசை
Point to Point Bus	-	இடைநில்லாப் பேருந்து
Portico	-	முன்றில் முகப்பு

Port of call	-	கலந்தொடு துறை
Precedent	-	முன் நிகழ்வு (முற்கோள்)
Prefix	-	முன் ஒட்டு
Presence of Mind	-	நொடியுணர் நுண்ணறிவு
Prestige	-	பீடுணர்வு
Programme	-	செய்திட்டம்
Profession	-	செய்தொழில்
Project	-	ஆகு திட்டம்
Promptness	-	விரைந்து வினைசெயல்
Proposal	-	கருத்துரு
Puncture	-	துளைப்பு
Physciotheraphy	-	இயல்முறை மருத்துவம்
Query	-	ஐய வினா
Queue	-	"நூ" வரிசை
Quorum	-	கோரெண்
Quotation	-	விலைப்புள்ளிகள்
Resident Medical Officer	-	மனையுறை மருத்துவர்

Ramp	-	சறுக்குப் பாதை
Ready	-	அணியம்
Ready Reckoner	-	உடன் கணிப்பேடு
Real Estate	-	வீடுமனை விற்பனை மையம்
Recognition	-	அறிந்தேற்பு
Red Carpet	-	நடைபாவாடை
Refill	-	மறு நிரப்பி
Remedy	-	தீர்திறம்
Ring Master	-	வட்டரங்கு நெறிப்படுத்துநர்
Risk	-	கவ்விடர்
Role Model	-	எடுத்துக்காட்டு ஏந்தல்
Royalty	-	உரிமை ஊதியம்
Rumour	-	ஓமல் (புரளி)
Running File	-	தொடர் கோப்பு
Round Tana	-	வட்டத் திட்டு
Scan	-	உடற் கூற்று வரைபடம்
Scheme	-	சமை திட்டம்
Season	-	செம்பருவம்

Secret	-	மறையம்
Secretary	-	செயலாளர் (செயலை ஆள்பவர்)
Semester	-	படிப்புப் பருவம்
Senior	-	முதுவர்
Senior Citizen	-	முதுநிலைக் குடிமகன்
Sentiment	-	நெஞ்சறி நெகிழ்வு
Set Top Box	-	தெரிவு அலைப்பேழை
Shade	-	சாயல்
Shampoo	-	குளியல் குழம்பு
Share Auto	-	பகிர்வுத் தானி
Sharpener	-	கூராக்கி
Shaving Blade	-	மழிப்புத் தகடு
Shopping	-	அங்காடிப் பயணம்
Sick Patient	-	நலிவுற்ற நோயாளர்
Side Effect	-	பக்க விளைவு
Sit - out	-	முன்றில் அமர்வு
Snag	-	இடர்ப்பாடு
Splint	-	சிம்பு
Speed Breaker	-	தடைமேடு

Stage	-	அரங்கமேடை
Stage Fear	-	அவையச்சம்
Stamina	-	தாங்குதிறன்
Stand At Ease	-	தளர்ந்து நில்
Standing Ovation	-	களிப்பு கரவொலி
Stapler	-	கம்பித் தைப்பி
Stepney	-	சேமச் சக்கரம்
Stethoscope	-	நாடிக் குழல்
Stool	-	உயரக் காலி
Stretcher	-	கைப்படுக்கை
Stores	-	பண்டகம்
Style	-	ஒயில்
Suggestion	-	புத்தெண்ணம்
Sump	-	தரை நீர்த்தொட்டி
Sunshade	-	வெப்பத் தடுப்பி
Sunstroke	-	வெப்பத் தாக்கு
Super	-	சுடர்மணி (அம்மாடியோவ்)
Suspense	-	ஆவல் தவிப்பு

Teapoy - தணிவு மேசை (தேனீர் மேசை)

Teenage - பதின் பருவம்

Teller - விரைவுக் காசாளர்

Temptation - அவா ஈர்ப்பு

Tension - மன இறுக்கம்

Theme Park - பொருட்பொலிவுப் பூங்கா

Three Phase Current - மும்முனை மின்சாரம்

Transaction - செயல்வினை

Transformer - மின்னளவுமாற்றி

Treaty - உடன்படிக்கை

Travels - பயண அமர்த்தகம்

Trunk Box - சேமப் பேழை

Tribute - புகழ் மாலை

Unparliamentary Words - அவையல் கிளவி

Up to Date - நாளிது வரையில்

Van - பெட்டியுந்து

Varnish - மெருகெண்ணெய்

Ventilator - காலதர்

V.I.Ps - மாப்பெருமக்கள்

Visiting Card - அறிமுக அட்டை

Visitor's Gallery - காண்போர் மாடம்

Walkie Talkie - நடைபேசி

Ward Nurse - பணிப்பகுதி செவிலி

Wash Basin - கழுவு வட்டில்

Weightage - மதிப்பேற்றம்

Weld Mesh - கம்பி வலை

Whip - ஏவுநர்

With Regards - கனிந்த அன்புடன்

Work Spot - வேலைத் தலைப்பு

Zero - சுழியம்

A to Z - ‘அ’கர முதல் ‘ன’கர இறுவாய்

உதிர்ந்த மலர்கள்

(இது வரை வெளிவராத விளக்கங்கள்)

Air Ambulance - மருத்துவ வானூர்தி

Ambulance என்றால் நமக்கு நன்றாகத் தெரியும். இல்லங்களிலிருந்து நோயாளிகளை மருத்துவமனைக்குக் கொண்டு செல்லும் ஊர்தியாகும் இது. மருத்துவமனை யிலிருந்து திரும்பி வருவதற்கும் இதைப் பயன் படுத்துகிறோம். நோயாளிக்ள் கைப்படுக்கையில் படுத்த படியாகப் பயணம் செய்தவற்கான வசதி இதில் உண்டு. இப்பொழுது Air Ambulance என்றால் என்ன என்று பார்ப்போம். இந்த Ambulance எவ்வாறு செயல்படுகிறது என்று நமக்குத் தெரிந்தாலும், உரிய தமிழ்த் தொடர் சட்டென்று தெரியவில்லை. தமிழ்நாட்டரசின் தமிழ் வளர்ச்சித் துறையின் சொல் வங்கிக் கூட்டத்திற்கான சொற்பட்டியலில் இந்தச் சொல் இடம் பெற்றிருந்தது.

முன்னதாக முத்தமிழ் ஆய்வு மன்றத்தின் கூட்டத்தில் இந்தச் சொல்லை ஆராய்ந்து பார்த்தோம். புரியவில்லையே! புரியவில்லையே! என்று விழித்துக்

கொண்டிருந்தோம். அந்த நேரத்தில் எங்கள் இன்றமிழ்க் கவிஞர் சி.தெ. இளமுருகன் அவர்கள் மென்மையாகவும் அன்பாகவும், ''மருத்துவ வானூர்தி'' என்னும் சொல் லாக்கத்தை இனிமையாக எடுத்துரைத்தார். மகிழ்ச்சிப் பெருக்கில் திளைத்து விளையாடினோம்.

ஒரு நாட்டிலிருந்து இன்னொரு நாட்டிற்கு மருத்துவச் சிகிச்சைக்காக, நோயாளியைக் கவனமாகக் கொண்டு செல்லவேண்டும். பயணத்தின்போதுகூட, தேவையான மருத்துவ வசதியைச் செய்து தரவேண்டும். இவ்வகையில், அனைத்து மருத்துவ வசதிகளையும் கொண்ட வானூர்தியே Air Ambulance ஆகும். மேலும், விளக்கம் தேவையில்லை. மெச்சத் தக்க சொல்லாக் கத்தை எட்டிப் பிடித்துவிட்டோம்.

அகர முதல எழுத்துஎல்லாம் ஆதி
பகவன் முதற்றே உலகு. (குறள்.1)

Bakery - சுடுமனை

ரொட்டி தயாரிக்கும் இடத்தை Bakery என்று கூறுகின்றோம். இதனை ''அடுமனை'' என்று கூறிப் பார்த்தால், சமையல் செய்யும் இடம் என்னும் பொதுவான பொருள் ஏற்படுகிறது. ''அவித்தல்'' என்னும் ஒரு சொல்லை எண்ணிப் பார்ப்போம். மலபார் அவியல் மகிழ்ச்சியான உணவாயிற்றே! அவித்தல் என்னும் சொல் வேக வைத்தல் என்று பொருள்படும் என்பதை, பாவேந்தர் பாரதிதாசனார் விரிவாக விளக்கியுள்ளார். பல்கலைக்கழகப் பேரகராதியும் இந்தப் பொருளை இனிது விளக்குகின்றது. ஆனால் ரொட்டி முதலான உணவுப் பொருளை சூட்டின் மூலம் வேக வைக்கின்றார்கள். எனவே Bakery என்பதை ''சுடுமனை'' என்று கூறிச் செவிச்சுவை பெறலாமே.

கற்றதனால் ஆய பயன்என்கொல் வால்அறிவன்
நற்றாள் தொழாஅர் எனின். (குறள். 2)

Boon - அருட்கொடை

Boon என்னும் சொல்லை நாம் அடிக்கடி கேட்டு மகிழ்கின்றோம். இதனை ''வரப்பிரசாதம்'' என்று மொழி பெயர்ப்பார்கள். இந்தச் சொல்லுக்கு மாற்றாக, ஓர் அரிய தமிழ்ச் சொல் கிடைக்குமா என்று ஆராய்வது நல்லது. நமது கோரிக்கையின்பேரில் அல்லது வேண்டுதலின் போது, நமக்கு நல்வாழ்த்துகளுடன் கிடைக்கின்ற சிறந்த நன்மையே Boon - என்பதாகும். பொதுவாக, இந்த நன்மைகளை ''ஆண்டவனின் அருட்கொடை'' என்று கூறுவார்கள். ''அருட்கொடை'' என்று தெளிவாகத் தெரிந்துவிடும். எனவே Boon என்பதை அருட்கொடை என்று சுருக்கிச் சொல்லி மகிழ்ச்சியைப் பெருக்கிக் கொள்ளலாமே!

மலர் மிசை ஏகினான் மாண்அடி சேர்ந்தார்
நிலமிசை நீடு வாழ்வார். (குறள். 3)

Bounced - Cheque - மதிப்பிழந்த காசோலை

வங்கிகளில் நடமாடுகின்ற Bounced - Cheque என்னும் செறிவுத் தொடரைப்பற்றி இப்போது சிந்திப்போம். "Cheque - Bounce" ஆகிவிட்டது என்று பேசுவதைப் பார்க்கிறோம். அடிக்கடி இப்படிப்பட்ட செய்திகளை நாம் கேட்பதால், இதற்கு ஒரு நல்ல மொழி பெயர்ப்பு தேவை என்பது நன்கு புலப்படுகிறது. வங்கிக் கணக்கில், பணம் இல்லாத காரணத்தால், குறிக்கப்பட்ட தொகை கொடுக்கப்படாமல், காசோலை திரும்பி வந்து விடுகிறது. இதற்குப் பெயர்தான், Bounced - Cheque, இதனை ''மதிப்பிழந்த காசோலை'' என்று மதிப்பாகச் சொல்லி மகிழ்ச்சியடையலாமே!

வேண்டுதல் வேண்டாமை இலான்அடி
சேர்ந்தார்க்கு
யாண்டும் இடும்பை இல. (குறள் 4)

Call-Taxi - அழைப்புச்சீருந்து

நமக்கு நன்கு தெரிந்த நறுந்தமிழ்ச் சொற்கள்கூட, நடைமுறைக்கு வரவில்லையே என்னும் கவலை நமம்மைப் பற்றிக் கொண்டுள்ளது. Call-Taxi என்னும் பெயரை ‘‘அழைப்புச் சீருந்து’’ என்று எப்பொழுதோ மொழிபெயர்த்துள்ளோம். நல்ல விளம்பரமும் செய்துள் ளோம். எனினும் மக்கள் அந்தப் புதிய பெயரை இதுவரை அறிந்து கொண்டதாகத் தெரியவில்லை. எடுத்த எடுப்பிலேயே ‘‘அழைப்புச் சீருந்து’’ என்று அழகு தமிழில் சொல்லி இருக்கலாம். அதன்பிறகு அதனை Call-Taxi என்று ஆங்கிலத்தில் மொழிபெயர்த்திருக்கலாம் அல்லவா? Car என்றால் சீருந்து; Bus என்றால் பேருந்து ; Taxi என்றால் வாடகைச் சீருந்து; Call -Taxi என்றால் ‘‘அழைப்புச் சீருந்து’’. வரிசையறிந்து வழங்கும் முறை தெரிகின்றதல்லவா? சென்னை நகரெங்கும் வாடகைச் சீருந்துகள் வலம் வருகின்றன. அவற்றின் இருபுறமும் ‘‘அழைபபுச் சீருந்து’’ என்று அழகு தமிழில் எழுதி வைக்கலாமே. சீருந்து உரிமையாளர்கள் இச்சீர்மிகு

பெயரை மகிழ்வுடன் ஏற்று, தமிழ்ப் பணியைத் தடையின்றி நடத்தலாமே, பொறுப்போம்; பொறுப்போம்; பொழுது விடியட்டும்!

இருள்சேர் இருவினையும் சேரா இறைவன்
பொருள்சேர் புகழ்புரிந்தார் மாட்டு. (குறள். 5)

❖ ❖ ❖

Cancellation - ரத்து - அற்றம்

தமிழில் பேசும்போதும், எழுதும்போதும், ''ரத்து'' என்னும் சொல் இப்பொழுதெல்லாம் அடிக்கடி பயன் படுத்தப்பட்டு வருகிறது. இதற்கு மாற்றாக தமிழ்ச் சொல் ஒன்றைக் கையாள வேண்டும் என்னும் எண்ணம் நீண்ட நாட்களாகப் பெருவேட்கையாக இருந்து வருகிறது. ஆயினும், இன்றுவரை சரியான தமிழ்ச் சொல் ஒன்றினை யாரும் புழக்கத்திற்குக் கொண்டுவரவில்லை என்றுதான் சொல்ல வேண்டும். அறவு, அன்மை, இன்மை என்றெல் லாம் சொல்லிப் பார்த்தோம். எதுவும் சரிவர ஒட்ட வில்லை. 'நீக்கம்' என்னும் சொல் பொருத்தமான சொல்லாக இருக்கும். ஆயினும், அதனை Removal என்னும் ஆங்கிலச் சொல்லுக்கு ஈடாகப் பயன்படுத்தி வருகிறோம். ஒருவர், இதனையே சற்று நீட்டிச் செயல் நீக்கம் என்று குறிப்பிட்டார். பொருத்தமாகத்தான் தோன்றுகிறது.

பாண்டிச்சேரிப் பல்கலைக்கழக முன்னாள் துணை வேந்தர் கல்வித் துறைப் பேரறிஞர் கி. வேங்கட சுப்பிரமணியம் அவர்களுக்குப் பிடித்தமான குறள்

ஒன்று இருக்கிறது. அவர், அதனை வாய்ப்பு நேரும் போதெல்லாம் ''சொல்லிச் சொல்லி'' மகிழ்வார்.

'அறிவு அற்றங் காக்குங் கருவி செறுவார்க்கும்
உள்ளழிக்க லாகா அரண்''

என்பதுதான் அந்தக் குறள். இந்த அருமையான குறளில் வருகின்ற ''அற்றம்'' என்னும் சொல்லுக்குப் பொருள் என்ன என்று பார்ப்போம். அழிவு 'Destruction' என்னும் இரண்டு சொற்களை வழங்குகின்றது அகராதி.

இப்போது ரத்து என்னும் சொல்லைக் கவனிப்போம். இருக்கின்ற ஒன்றை நீக்கிவிடுவது 'ரத்து' ஆகும். அமைச்சரின் பயண நிரல் 'ரத்து' செய்யப்பட்டது என்று எழுதுவதாக வைத்துக் கொள்வோம். இதனை, அமைச்சரின் பயண நிரல் அற்றம் செய்யப்பட்டது என்று எழுதினால் பொருத்தமாக இருக்கும் அல்லவா? அற்றம் என்பதே அமுதப் புனலாகும்.

பொறிவாயில் ஐந்து அவித்தான் பொய்தீர் ஒழுக்க
நெறிநின்றார் நீடுவாழ் வார். (குறள்.6)

❖ ❖ ❖

Carry Bag - ஏந்துபை

கடைக்குச் செல்லும்போது, கையில் பையை எடுக்காமல் சென்றுவிடுகிறோம். பொருள்களை வாங்கிய பின்,கடைக்காரர் Carry Bag என்னும் பையை அன்பாக வழங்குகின்றார். பொருள்களை அந்தப் பையில் இட்டு, வீட்டிற்கு ஏந்தி வருகின்றோம். ''குழந்தையைக் கையில் ஏந்தி வந்தார்'' என்று சொல்லும் முறை நமக்கு நன்றாகத் தெரியுமல்லவா? அவ்வாறாயின் Carry Bag என்பதை எப்படிச் சொல்வது என்று தயங்கத் தேவையில்லை. 'ஏந்து பை' என்னும் எழிற்பெயரை நாம் ஏந்திக் கொள்ளலாமே!

அறஆழி அந்தணன்தாள் சேர்ந்தார்க்கு அல்லால்
பிறஆழி நீந்தல் அரிது. **(குறள்.8)**

❖ ❖ ❖

Co-Option - தேர்விணைப்பு

குறிப்பிட்ட ஒரு பொருளை ஆய்ந்து, பரிந்துரைகள் செய்வதற்காக ஒரு குழுவினை அமைப்பதாக வைத்துக் கொள்வோம். அதில், குறிப்பிட்ட ஒரு எண்ணிக்கையை உடையவர்கள் உறுப்பினர்களாக இருப்பார்கள். ஆய்வுப் பணியைத் தொடங்கிய பிறகு அந்தக் குழுவில், மேலும் சில உறுப்பினர்களைச் சேர்த்துக் கொள்வது தேவைப் படலாம். அப்போது, புதிய உறுப்பினர்களைச் சேர்த்துக கொள்ளும் அதிகாரத்தை அந்தக் குழுவிற்கே வழங்குவதுண்டு. பொருத்தமான நுண்ணறிவும் பயிலறிவும் உடையவர்களைத் தேர்ந்தெடுத்து இணைத்துக் கொள்வார்கள். இதனைத் "தேர்விணைப்பு" என்று தெளிந்து, தேன்மழையில் நனையலாமல்லவா!

தனக்குஉவமை இல்லாதான் தாள்சேர்ந்தார்க்கு அல்லால்
மனக்கவலை மாற்றல் அரிது. (குறள்.7)

❖ ❖ ❖

Dark Colour - அடர் நிறம்

Dark Colour என்றும் Light Colour என்றும் பேசி வருகின்றோம். Colour என்னும் சொல்லுக்கு எண்ணற்ற பொருள்கள் இருக்கின்றன. எனினும், நிறம், வண்ணம் என்னும் இரண்டு சொற்கள் மட்டுமே நமக்கு முக்கியமானவை.

Thick என்னும் சொல்லும் ஆங்கிலத்தில் புழங்கி வருகின்றது. இதனைக் 'கெட்டி' என்று சொன்னால் பொருத்தமாக இருக்கலாம்.

Dark என்பதை அடர்த்தியான, நெருக்கமான, செறி வான என்றெல்லாம் விளக்கிப் பார்க்கலாம். அடர்த்தியான நிறம் என்பதுதான் நெருக்கமான பொருள். இதனை அடர் நிறம் என்றுகூடச் சுருக்கிச் சொல்லலாமே! 'அடர் நிறம்' அழகு தமிழ் வடிவமாய் அகம் குளிர்விக்கும் அல்லவா?

பிறவிப் பெருங்கடல் நீந்துவர் நீந்தார்
இறைவன் அடிசேரா தார். (குறள்.10)

❖ ❖ ❖

Dark - Room - இருளறை

இருட்டறையில் உள்ளதடா உலகம் சாதி
இருக்கின்ற தென்பானும் இருக்கின்றானே!

என்று பாடுகின்றார் பாவேந்தர் பாரதிதாசனார். ''இருட்டறை'' என்னும் சொல் நமக்கு நன்கு தெரிந்த சொல். இதனை வள்ளுவரும் பயன்படுத்தியிருக் கின்றார். Dark-Room என்பதற்கு நிழற்படத்துக்குரிய இருட்டறை என்று பொருள் கூறலாம். இந்த அறையில் இயல்பான வெளிச்சம் உள்ளே புகுவதற்கு இடமளிப்ப தில்லை. எனவே, இதனை இருட்டறை என்று கூறாமல் ''இருளறை'' என்று எடுத்துக கூறின் இன்பம் ஊற்றெடுக்கு மல்லவா?

கோள்இல் பொறியில் குணம்இலவே
எண்குணத்தான்
தாளை வணங்காத் தலை. (குறள்.9)

❖ ❖ ❖

Dowry - வரன்தொகை

Dowry என்னும் சொல்லுக்கு ஓர் இனிமையான பொருளைத் தருகின்றது ஆங்கில அகராதி. 'திருமணக் காலத்தில் ஒரு பெண், மணமகனுக்குக் கொடுக்கின்ற குறிப்பிட்ட ஒரு பெருந்தொகையே' என்பது அந்த விளக்கமாகும். தீங்கினைத் தருகின்ற இந்த வழக்கம். சட்டங்கள் இயற்றியும் தீர்ந்தபாடில்லை. மணமகன் நம் வீட்டிற்குப் புதிதாக வந்து மாப்பிள்ளையாகின்றான். வருபவன்தானே வரன்! வருகை, வரவு, வரம் ஆகியவை நமக்கு நன்கு பழகிய சொற்களாயிற்றே! இவற்றுடன் வரன் என்னும் சொல்லையும் ஒப்பிட்டுப் பார்க்கலாமே! வரனை நாம் விலை கொடுத்து வாங்குகின்றோம். வரனுக்குக் கொடுக்கப்படும் இந்தத் தொகையை "வரன் தொகை" என்று சுருக்கிச் சொல்லி மகிழ்ச்சியைப் பெருக்கிக் கொள்ளலாமே!

கருமம் செயஒருவன் கைதூவேன் என்னும்
பெருமையின் பீடுஉடையது இல். (குறள்.1021)

❖ ❖ ❖

Emotion - உணர்ச்சிப் பிழம்பு
Emotionalism - உணர்ச்சிப் பிழம்பாண்மை

உணர்ச்சிப் பெருக்கால் உந்தப்படும் நிலையை Emotion என்று கூறலாம். Emotion ஆகிவிடாதீர்கள் என்று அன்பாக எச்சரிப்பது வழக்கம். இதற்கு ''உணர்ச்சி வசப்பட்டுவிடாதீர்கள்'' என்பதுதானே பொருள்? அவ்வாறாயின் ''உணர்ச்சி வசப்படுதல்'' என்பதை Emotion என்று உணர்ந்துகொள்கின்றோம். உணர்ச்சிப் பெருக்கினால் உணர்ச்சிப் பிழம்பாக மாறிவிடுகின்றோம். மொழிபெயர்ப்பை நெருங்கி வந்துவிட்டோம்! உணர்ச்சிப் பிழம்பே நேரான பொருளாகும். உணர்ச்சி நம்மை ஆட்கொள்ளும்போது, அறிவுக்கு அங்கே இடமில்லாமற் போகின்றது. இதனை ஏற்றுக் கொண்ட நிலையில், இன்னொன்றும் கேட்பார்கள். Emotionalism என்றால் என்ன என்பது அடுத்த கேள்வியாகும். வில்லாண்மை, இல்லாண்மை, நல்லாண்மை என்னும் சொற்களை நாம் நன்கு அறிந்துள்ளோம் அல்லவா? இவையே போன்று ''உணர்ச்சிப் பிழம்பாண்மை'' என்னும் சொல்லை உருவாக்கி உள்ளம் குளிரலாமே?

ஆள்வினையும் ஆன்ற அறிவும் எனஇரண்டின்
நீள்வினையால் நீளும் குடி. (குறள்.1022)

❖ ❖ ❖

Ex-gratia Payment - பரிவுத் தொகை

Gratulty என்னும் சொல்லைக் “கருணைக் கொடை” என்று மொழிபெயர்க்கின்றோம். சரியான மொழி பெயர்ப்பாக இது அரியாசனம் ஏறியுள்ளது. அவ்வாறாயின், Ex-gratia Payment என்பது ஏன்ன? முழுக்க முழுக்க அன்பின் அடிப்படையில் அளிக்கப்படும் தொகையாகும் இது. எனவே, இதனைப் “பரிவுத் தொகை” எனப் பகர்ந்து தமிழின் வளத்தைத் தரணிக்கு அறிவிக்கலாமே!

குடிசெய்வல் என்னும் ஒருவற்குத் தெய்வம்
மடிதற்றுத் தான்முந் துறும் (குறள்.1023)

❖ ❖ ❖

Filter Coffee - வடித்த காநீர்

Coffee என்னும் சொல்லைக் ''காப்பி'' என்றே எழுதும் பழக்கம் இருந்து வருகிறது. இவ்வாறு எழுத்துப் பெயர்ப்பாக எழுதுவதில் தவறில்லை என்றே தோன்று கிறது. காப்பிச் செடி ஒரு சோலைப் பயிர் என்பதை நாம் கருத்தில் கொள்ள வேண்டும். ஓரெழுத்தொரு மொழி யாகிய ''கா'' என்னும் எழுத்து ''சோலை'' என்னும் பொருளையும் தருகிறது. Tea என்பதைத் ''தேநீர்'' என்கிறோம். இதேபோன்ற சுருக்கமான முறையில், Coffee என்பதைக் ''காநீர்'' என்று குறிப்பிட்டு களிப் படையலாமே! Coffee ஆர்வலர்கள் Filter Coffee கேட்பார்கள். இதனை ''வடித்த காநீர்'' என்று சொல்லி வெற்றிக் கொடி நாட்டலாமே!

சூழாமல் தானே முடிவுஎய்தும் தன்குடியைத்
தாழாது உஞற்று பவர்க்கு. (குறள்.1024)

❖ ❖ ❖

Helicopter - வான்சிவிகை என்று முழங்குவோம்

அறிவியல் முன்னேற்றத்தின் வேகத்தை அளந்து கூற முடியவில்லை. புதுப்புதுப் பொருள்கள் புனையப் பெற்றுப் பொலிவு பெறுகின்றன. எந்தத் துறையாயினும் அந்தத் துறையில் விறுவிறுப்பான முன்னேற்றம் ஏற்பட்டு வருகிறது. வானூர்திகளை எடுத்துக் கொண் டால், நுட்பம் நிறைந்த வானூர்திகள் அன்றாடம் வந்து சேர்கின்றன.

இன்று, எங்கணும் பேசப்படுகின்ற ஒரு வானூர்தி ஹெலிகாப்டர் Helicopter என்பதாகும். என்றோ வந்துவிட்ட இந்த வானூர்திக்கு இன்றுவரை சரியான தமிழ்ப் பெயர் அமையவில்லை. இந்த ஆங்கிலப் பெயருக்கான விளக்கம் என்ன? வான் வெளியில், நேராக உச்சியில் அமைந்துள்ள பெரிய இறக்கைகளால் அசைக்கப்படுகின்ற வானூர்தி என்பதாகும். இந்த வானூர்தி குறிப்பிட்ட இடத்தில் நேராகக் கீழே இறங்க முடியும் என்பது இதன் சிறப்பாகும். அதேபோன்று, நேராக மேலே எழுந்து பறக்கவும் முடியும். ஆகையால், இதனை "நேரெழுகை வானூர்தி" என்று சொல்லிப் பார்த்தோம்.

வேறு சிலர் ''திருகு இறக்கை வானூர்தி'' என்று தெரிவித்தார்கள். எதுவுமே பழக்கத்திற்கு வரவில்லை.

அண்மையில், தமிழ்நாட்டரசு, தமிழ் வளர்ச்சித் துறை சொல் வங்கிக் கூட்டம் நடைபெற்றது. அந்தக் கூட்டத்தில், இதுபற்றி ஆய்வு நடைபெற்றது. இந்த வானூர்தி ஒரு சிறிய அளவிலான வானூர்தியாகும். நான்கைந்து பேர்களே பயணம் செய்யும் வாய்ப்புடையது. இது, வானிலே மிதந்து செல்லும் காட்சி, ஓர் அழகிய காட்சியாகும். ''இது, ஓர் எலியின் வடிவம்போல் இருக்கிறது.'' ஆகவே, இதனை, ''எலிவானூர்தி என்று குறிபிட்டால் என்ன?'' என்று ஓர் உறுப்பினர் நகைச் சுவையாகக் கேட்டார். இன்னொருவர் ''இது ஒரு பல்லக்குப் போன்றது'' என்று தெளிவுபடுத்தினார். துறவிகள் பயணம் செய்யும் பல்லக்கினை நாம் பார்த்திருக்கிறோமல்லவா? ஆகவே, வான் பல்லக்கு என்று பெயரிட்டு அழைத்தால் என்ன? என்பது அவருடைய வினாவாகும். அப்போது வள்ளுவர் பெருந்தகையின் திருக்குறள் என் நினைவுக்கு வந்தது.

அறத்தாறு இதுஎன வேண்டா சிவிகை
பொறுத்தானோடு ஊர்ந்தான் இடை -37

என்னும் அழகிய குறட்பாவை அனைவரும் அறிந்துள்

ளோம். எனவே, நான் பல்லக்கு என்பதற்கு மாற்றாக சிவிகை என்று செப்பினால் என்ன என்று கேட்டேன். அனைவரும் சேர்ந்து மகிழ்ச்சி ஆரவாரமாக ''வான் சிவிகை'' என்று வலம் வரட்டுமே வள்ளுவர் வழி காட்டு கின்றார். அவரை வாழ்த்தி வணங்குவோம்.

குற்றம் இலனாய்க் குடிசெய்து வாழ்வானைச்
சுற்றமாச் சுற்றும் உலகு. (குறள்.1025)

❖ ❖ ❖

Innocence - ஏதுமறியாமை

Ignorance என்னும் சொல்லிற்கும் Innocence என்னும் சொல்லிற்கும் நுட்பமான வேறுபாடு இருக்கின்றது. கல்வியறிவு இல்லாதவரை - கற்க வேண்டியவற்றைக் கற்றுத் தெளியாதவரை - Ignorant Person என்று கூறுகின்றோம். இந்த நிலைமையினை ''அறியாமை'' என்று அறிவிக்கலாம். இன்னொரு வகையினராக இருப்பவர்தான் Innocent Person. ஒரு குற்றம் நடந்துவிடுகிறது. அந்தக் குற்றத்தைப் பற்றி அவருக்கு அறவே தெரியாது. அப்படிப்பட்டவரை Innocent Person என்று சொல்கிறோம். எந்தத் தொடர்பும் இல்லாதிருக்கின்ற இவர்களை ''அப்பாவி மக்கள்'' என்று சொல்வதுண்டு. இந்த நிலையை ''ஏதும் அறியாமை'' என்று குறிப்பிடலாமல்லவா?

Innocence என்னும் ஆங்கிலச் சொல் ''ஏதுமறியாமை'' என்னும் எழிலார்ந்த மொழிபெயர்ப்பைப் பெற்று நம்மை வியக்கச் செய்கிறது.

நல்ஆண்மை என்பது ஒருவற்குத் தான்பிறந்த
இல்ஆண்மை ஆக்கிக் கொளல். (குறள்.1026)

❖ ❖ ❖

Intercom - உள்ளிடப்பேசி

இல்லங்களிலும் அலுவலகங்களிலும் Intercom வசதி இருப்பதை நாம் காண்கிறோம். வீட்டினுள் ஓரிடத்தி லிருந்து இன்னோர் இடத்திற்குப் பேசுவது எளிதாக இருக்கிறது. அலுவலகத்திலும் இதே முறையில் ஒருவருக்கொருவர் பேசிக் கொள்ள Intercom இடமளிக் கிறது. இந்த தொலைபேசியை ''உள்ளிடப்பேசி'' என்று அழைத்து உவகை கொள்ளலாம் அல்லவா?

அமரகத்து வன்கண்ணர் போலத் தமரகத்தும்
ஆற்றுவார் மேற்றே பொறை. (குறள்.1027)

❖ ❖ ❖

Intuition - உள்ளுணர்வு

Instinct Intuition என்னும் இரண்டு சொற்களும் மிக நுட்பமான பொருள் வேறுபாடு உள்ள சொற்களாகும். Instinct என்பது தானாக அறியும் அறிவு அலலது தன் உணர்வு. இதை இயல்புணர்வு என்றுகூடக்குறிப் பிடலாம். Intuition என்ப்து மிக நுட்பமான ஒரு பொருளைத் தருகிறது. புறத்தே இருந்து எதனையும், ஏற்றுக்கொள்ளாமல், அகத்தின் உணர்வால் உணர்ந்து கொள்வதுதான் Intuition ஆகும். எனவே Intuition என்பதை "உள்ளுணர்வு" என்று தெள்ளத் தெளிவாகத் தெரிந்து கொள்ளலாமே!

குடிசெய்வார்க்கு இல்லை பருவம் மடிசெய்து
மானம் கருதக் கெடும். (குறள். 1028)

❖ ❖ ❖

Jackpot - பந்தயப் பொற்கிழி

தொலைக்காட்சிகளில், Jackpot என்னும் பெயர் பெருமுழக்கமிட்டு உலா வருவதை, நாம் காண்கிறோம். இந்தப் பெயருக்குச் சரியான தமிழ்ப் பெயர் என்ன என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும். பணம் வைத்து விளையாடுகின்ற ஒரு சீட்டாட்டத்திலோ, பரிசுச் சீட்டுப் போட்டியிலோ, அல்லது வேறொரு பந்தயம் எதிலுமோ, யாரேனும் ஒருவர் திரட்டுகின்ற பெரிய தொகை என்று, இதற்குப் பொருள் கூறலாம். எதிர்பாராத ஒரு பெரிய வெற்றியினையும் அல்லது ஒரு விருதினையும்கூட இது குறிக்கலாம்.

குதிரைப் பந்தயத்திலும் இந்தப் பெயர் பெரிதும் பேசப்படுகிறது. தொலைக்காட்சியில், ''சரியான விடை. தங்கத்தை அள்ளிச் செல்லுங்கள்'' என்று அறிவிக்கின்றார்கள்.

இந்நிலையில், பொதுவானதொரு நல்ல தமிழாக்கத்தை நாம் காண்பது மிகவும் முக்கியமாகும். எதிர்பாராத வெற்றியின்மூலம் கிடைக்கின்ற தொகையாக இது இருப்பதால், ''பொற்கிழி'' என்னும் பெயரைக் கருத்தில்

கொள்ளலாம். இந்தப் பொற்கிழி, ஒரு பந்தயத்தின்மூலம் கிடைப்பதாகவும் இருக்கின்றது.

எனவே, இதனைப் ''பந்தயப் பொற்கிழி'' என்று பூரிப்புடன் பொறித்து வைக்கலாம் அல்லவா? Jackpot - பந்தயப் பொற்கிழி.

இடும்பைக்கே கொள்கலம் கொல்லோ
குடும்பத்தைக்
குற்றம் மறைப்பான் உடம்பு. (குறள்.1029)

❖ ❖ ❖

Junior - இளவர்

Senior என்னும் சொல்லை ‘‘முதுவர்’’ என்று பொருத்தமுற மொழிபெயர்த்துள்ளோம். "Junior" என்னும் சொல்லை எவ்வாறு மொழிபெயர்ப்பது என்னும் வினா இப்போது எழுமல்லவா? மூத்தவர், இளையவர் என்று சொல்லும் வழக்கம் இருந்து வருகின்றது. இளையவரை இளவல் என்றும் குறிப்பிடுகின்றோம். Junior-ரை ‘‘இளவர்’’ என்னும் புதிய சொல்லால் போற்றி மகிழலாமே!

இடுக்கண்கால் கொன்றிட வீழும்அடுத்துஊன்றும்
நல்ஆள் இலாத குடி. (குறள்.1030)

❖ ❖ ❖

Libel - எழுத்துவழி அவதூறு

Defamation Case என்று அடிக்கடி பேசுகின்றோம். இதனை ''மானநஷ்ட வழக்கு'' என்று சொல்லிக் கொண்டிருந்தோம். இப்போது இதனை ''அவதூறு வழக்கு'' என்ற அழகு தமிழில் சொல்லி மகிழ்கின்றோம். இன்னும் இரண்டு இணையான ஆங்கிலச் சொற்கள் இருக்கின்றன. அவை Slander, Libel என்பனவாகும். ஒருவரது பெருமைக்குத் தீங்கு செய்கின்ற வகையில் அவரைப்பற்றி ஒரு பொய்யான தகவலை வாய் மொழியாகப் பரப்புதல் Slander என்பதாகும். ஒருவரது பெருமைக்குத் தீங்கு செய்கின்றவகையில் அவரைப் பற்றிய உண்மைக்கு மாறான தகவலை எழுத்து வடிவில் வெளியிடுதல் Libel எனப்படும். இந்தச் சட்டச் சொற்கள் எவ்வாறு நுட்பமாக வேறுபடுகின்றன என்பதைக் கண்டு களிப்படைகின்றோம். அவ்வாறாயின், இவற்றிற்கு இணையான தமிழ்ச் சொற்கள் யாவை? என்பதே நமக்கு ஏற்பட்டுள்ள சிக்கலாகும். ''வாய்மொழி அவதூறு'', ''எழுத்துமொழி அவதூறு'' என்று சொல்லிப் பார்த்தால் வாயும் மணக்கின்றது. எழுத்தும் மணக் கின்றது.

''எழுத்துவழி அவதூறு'' என்பதுதான் Libel என்று எங்கெணும் எழுந்து முழக்கமிடலாமே!

இருநோக்கு இவள் உண்கண் உள்ளதுஒருநோக்கு
நோய்நோக்குஒன்று அந்நோய் மருந்து.
(குறள். 1091)

❖ ❖ ❖

Mental Agony - மன உளைச்சல்

Mental Agony என்னும் சொற்கள் ஆங்கிலத்தில் ஓர் அழகிய செறிவுத் தொடராக அமைந்து கிடக்கின்றது. இந்தத் தொடரின் இனிய ஒலியை, அழகு குன்றாமல், தமிழிலும் வடித்துக் கொடுக்க வேண்டுமல்லவா? உளைச்சல், மன உளைச்சல் என்னும் சொற்களைச் சிலர் அடிக்கடி பயன்படுத்துவதைப் பார்க்கின்றோம்.

உளைச்சல் என்னும் சொல்லுக்குத் தாங்க முடியாத அல்லது பொறுக்க முடியாத வலி எனப் பொருள் கொள்ளலாம். இவ்வாறே மன உளைச்சல் என்பது தாங்கொண்ணா மனத்துன்பத்தைக் குறிக்கும். எனவே Mental Agony - என்னும் தொடரை ‘மன உளைச்சல்’ என்று உரைத்து உள்ளம் தெளியலாமே.

**கண்களவு கொள்ளும் சிறுநோக்கம் காமத்தின்
செம்பாகம் அன்று பெரிது. (குறள்.1092)**

❖ ❖ ❖

Mentor - நல்லாசான்

Mentor என்னும் சொல் செய்தித் தாள்களில் அடிக்கடி காணப்படுகிற ஒரு சொல்லாகும். ஒவ்வொரு குடும்பத்திற்கும் ஒரு Mentor இருப்பார். இவரைக் ''குலகுரு'' என்றுகூடச் சொல்லலாம். இதேபோன்று, ஒவ்வோர் அரசியல் தலைவருக்கும் ஒரு Mentor இருப்பார். இவரை ''வழிகாட்டி'' என்று சொல்லலாம். Mentor என்னும் ஆங்கிலச் சொல்லுக்குச் சரியான ஆங்கிலப் பொருள் காண்போமாயின், அது நம்பிக்கை யான ஆசிரியர் அல்லது ஆய்ந்துரைகள் என்று அமையும். எனவே Mentor என்பவர் ஓர் ஆசிரியராகவும் ஒரு வழிகாட்டியாகவும் அமைகின்றார். ஆசிரியரை ''ஆசான்'' என்றும் குறிப்பதுண்டு. இந்நிலையில் நாம் ''நன்னெறி'', ''நல்வழி'' போன்ற நூல்களின் பெயர்களை எண்ணிப் பார்த்தால் ''நல்லாசான்'' என்னும் இனிய மொழி பெயர்ப்பு இனிது ஓடிவரும். இந்த அழகிய சொல்லாக்கத்தை எனக்கு எடுத்துக் கூறிய, அருமை நண்பர் திருக்குறள் மாமணி, வைரவரிக் கவிஞர். மா. வழித்துணைவன் அவர்களை மனமாரப் பாராட்டுகின்றேன்.

நோக்கினாள் நோக்கி இறைஞ்சினாள் அஃதுஅவள்
யாப்பினுள் அட்டிய நீர். (குறள்.1093)

❖ ❖ ❖

Pay Order - கொடுப்பு ஆணை

வங்கிக் கலைச் சொற்கள் மெல்ல, மெல்லப் பழகி வருகின்றன. விரைவான முன்னேற்றம் இல்லை என்றுதான் சொல்லவேண்டும். காசோலை தெரியும், வரைவோலை தெரியும், காசாளர் தெரியும். விரைவுக் காசாளர் யார் என்று இன்னும்கூட தெரியவில்லை. இன்றுங்கூட **Pass Book** என்றுதான் சொல்லி வருகிறோம். ''கைச்சிட்டை'' என்னும் அழகிய பழம் பெயரை நாம் பயன்படுத்துவதில்லை. தமிழர்கள் தலை நிமிர வேண்டுமெ. தனித் தமிழ்ச் சொற்களைத் தடையின்றிப் பயன்பாட்டிற்குக் கொண்டு வருதல் வேண்டும்.

Pay Order என்றால் என்ன? என்று ஒருவர் கேட்டார். அதுவும் காசோலைதானே என்று வினவினார். ஏன்? இதற்கொரு நறுந்தமிழ்ச் சொல் கிடைக்காதா?

நம்முடைய வங்கிக்கணக்கில் பணம் இருக்கிறது. காசோலை தருகிறோம். ஆனால், Pay Order என்னும் போது, நாம் குறிப்பிட்ட தொகையை வங்கியில் செலுத்துகிறோம். இன்னாருக்கு அந்தத் தொகை

கொடுக்கப்பட வேண்டும் என்று தெரிவிக்கின்றோம். ஆதலால், இதனைக் ''கொடுப்பு ஆணை'' என்று கொள்கை முழக்கம் செய்யலாம் அல்லவா?

யான்நோக்கும் காலை நிலன்நோக்கும்
நோக்காக்கால்
தான்நோக்கி மெல்ல நகும். (குறள் 1094)

❖ ❖ ❖

Ringmaster - வட்டரங்கு நெறிப்படுத்துநர்

Circus என்னும் சொல்லை ''அருந்திறல் அரங்கு'' என்று நாம் மொழி பெயர்த்துள்ளோம். அருந்திறல் அரங்கு ஒன்றின் வட்டத்தினுள் நிகழ்ச்சிகள் நடைபெறுகின்றன. இந்நிகழ்ச்சிகளின் பொறுப்பாளராக இயங்குபவர் தான் Ringmaster என்பவர் என்பது அகராதி தரும் அரிய விளக்கமாகும். எனவே, இவருக்கு ''வட்டரங்கு நெறிப் படுத்துநர்'' என்னும் பெயரைச் சூட்டி வாழ்த்துக் கூறலாமே!

குறிக்கொண்டு நோக்காமை அல்லார் ஒருகண்
சிறக்கணித்தாள் போல நகும். (குறள்.1095)

❖ ❖ ❖

Role Model - எடுத்துக்காட்டு ஏந்தல்

பெரிய தலைவர்களின் அருஞ்செயல்களைக் கண்டு நாம் பெருங்களிப்பு அடைகின்றோம். பேரார்வம் கொள்கின்றோம். தேசப் பிதா காந்தியடிகள், மனிதருள் மாணிக்கம் பண்டித ஜவஹர்லால் நேரு, வழி காட்டும் வான்பொருள் தந்தை பெரியார், பண்பாட்டுப் பகலவன் பேரறிஞர் அண்ணா, முத்தமிழ் மூதறிஞர் டாக்டர் கலைஞர் போன்ற தலைவர்களின் செயற்பாடுகள் நம் கண்முன் வந்து வந்து போகின்றன. இதேபோன்று புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர்., நடிகர் திலகம் சிவாஜி கணேசன் போன்றோரின் சிறந்த நடிப்புக் காட்சிகளும் நம் கருத்தைக் கவருகின்றன.

சிறந்த தலைவர்கள், சிறந்த அறிஞர்கள், சிறந்த நடிகர்கள் ஆகியோரின் ஒழுகுமுறைகள் நமக்கு நன்னயமிக்க எடுத்துக்காட்டுகளாக இலங்குகின்றன. அவர்களைப்போலவே நாமும் செயற்பட்டு நற்பெயர் ஈட்டவேண்டுமென்று பெரிதும் விழைகின்றோம்.

மேற்சொன்ன பெரியோர்களை ஆங்கிலத்தில் ஒரு சிறப்புப் பெயரால் அழைப்பார்கள். அந்தப் பெயர்தான்

Role Model என்பதாகும். அழகிய இந்த ஆங்கிலப் பெயருக்கு ஈடான அழகிய தமிழ்ப் பெயர் இருக்கிறதா என்று கேட்டால், இருக்கிறது என்று மார்தட்டிக் கூறலாம். ''எடுத்துக்காட்டு ஏந்தல்'' என்னும் தொடர் மொழியைச் சொல்லிப் பாருங்கள். சிந்தை மணக்கும், செவி மணக்கும், வாய் மணக்கும், முந்தை மொழியின் இனிமை மேலோங்கி நிற்கும். வாழ்க, Role Model, வாழ்க தமிழ் மொழி என்று முழங்குவோம்.

உறாஅ தவர்போல் சொலினும் செறாஅர்சொல்
ஒல்லை உணரப் படும். (குறள்.1096)

❖ ❖ ❖

Secret - மறையம்

Secret என்னும் சொல் அலுவலகங்களில் அடிக்கடி பயன்படுத்தப்படுகின்ற ஒரு சொல்லாக இருக்கின்றது. நேரில் தெரியாமல் ஒளிந்துகொண்டு இருக்கும் ஒரு பொருளை Secret என்று கூறுகின்றோம். ''மறைவாய்ப் புதைத்த ஓடு மறைந்த மாயம் ஏதோ'' என்னும் திரைப்படப் பாடல் நமக்கு நன்கு தெரியும். என்பதை ''மறைப்பொருள்'' என்று சொல்லும் வழககம் நெடுங்கால மாக இருந்து வருகிறது. இதைச் சற்று சுருக்கிப் பார்த்தால், ''மறையம்'' என்னும் சொல் தோன்றி நம்மை மகிழ் விக்கும். இரகசியம், மறைபொருள் என்றெல்லாம் கூறு வதைவிட ''மறையம்'' என்னும் சொல் மனநிறைவைத் தருகின்றதல்லவா!

செறாஅச் சிறுசொல்லும் செற்றார்போல் நோக்கும்
உறாஅர்போன்று உற்றார் குறிப்பு. (குறள்.1097)

Secretary - செயலாளர்

செயலாளர் என்னும் சொல்லை, எடுத்துக் கொள் வோம். இதன் பொருளையும் பயன்பாட்டையும் ஆராய்வோம். தனியார் நிறுவனமாயினும் சரியே; அரசு நிறுவனமாயினும் சரியே; அங்கெல்லாம் செயலாளர் செயல்பட்டு வருவார். பணிகளைச் செம்மையாக நடத்தி வருவார். ஒவ்வொரு நிறுவனத்திற்கும், உயிர்நாடியாக இருப்பவர் செயலாளரே! என்று துணிந்து கூறலாம். சில நிறுவனங்களில் ''மேலாளர்'' இருப்பார். ஆராயுமிடத்து, உண்மையில் அவரும் ஒரு செயலாளரே ஆவார்.

எழுத்தை ஆள்பவர் எழுத்தாளர்; அதேபோன்று செயலை ஆள்பவர் செயலாளர். செயலாளர் எனும் சொல்லைச் சிலர் ''செயலர்'' என்று சுருக்கி எழுதி வருகின்றார்கள். இந்தச் சுருக்கம் தேவைதானா? என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும்.

இட்ட பணியைத் தட்டாமல் செய்பவர் செயலராக இருக்கலாம். ஆனால், அவரோ ஆள்வினை உடையவர், ஆற்றல் மிக்கவர் என்பதை எளிதில் உணரலாம்.

Secretary என்னும் சொல்லிலேயே (சீக்ரெட்)

என்னும் சொல் அடங்கியிருப்பதைக் காண்கிறோம். ஆகவே செயலாளர் என்பவர் மறையத்தைக் காப்பாற்றும் பொறுப்புடையவராகிறார். அவர் மிகவும் முக்கியமானவர்.

அரசு தலைமைச் செயலாளரை ''அரசு தலைமைச் செயலர்'' என்று எழுதுவது தவறாகும். செயலரா? செயலாளரா என்னும் வினாவிற்கு, ''செயலாளர்'' என்னும் விடையே சரியான விடையாகும். காலம் கனிந்துவிட்டது. ஒற்றுமை ஓங்கவில்லையே! இனியேனும் செயலரை விட்டுவிடுவோம்; செயலாளரை ஏற்று மகிழ்வோம்.

அசைஇயற்கு உண்டு ஆண்டுஓர் ஏஎர்யான்
நோக்கப்
பசையினன் பைய நகும். (குறள். 1098)

❖ ❖ ❖

Senior - முதுவர்

Senior என்னும் சொல் அடிக்கடி பேசப்படுகின்ற ஒரு சொல்லாகும். ''அவர் எனக்கு Senior'' என்று சொல்லும் வழக்கம் இருந்து வருகிறது. தெய்வப் புலவர் திருவள்ளுவர் ஒரு செய்தியினைத் தெரிவிக்கிறார்.

நன்றென்று வற்றுள்ளும் நன்றே முதுவருள்
முந்து கிளவாச் செறிவு

என்பது அவருடைய அமுத வாக்காகும். ''பெரியவர்கள் இருக்கின்ற அவையிலே, அவர்கள் பேசுவதற்கு முன்பாகச் சிறியவர்கள் முந்திக்கொண்டு பேசுதல் ஆகாது'' என்பது தான் இதற்குரிய விளக்கமாகும். Senior என்பவர் யார் என்பது இப்பொழுது புரிகின்றதல்லவா? Senior என்பவரை ''முதுவர்'' என்னும் வள்ளுவரின் வாய் மொழியால் வழங்கி மகிழலாமல்லவா?

ஏதிலார் போலப் பொதுநோக்கு நோக்குதல்
காதலார் கண்ணே உள. (குறள்.1099)

Sentiment - நெஞ்சறி நெகிழ்வு

மென்மையான உணர்வுகளை வெளிப்படுத்து ய ø » Sentiment என்று கூறலாம். புறக்காரணங்கள் எவை யுமின்றி, உள்ளத்தால் மட்டுமே உணரப்படுகின்ற இயல்பான உணர்ச்சியே இந்த Sentiment என்பதாகும். இச்சொல் வானொலியிலும் தொலைக்காட்சியிலும் அடிக்கடி பயன்படுத்தப்பட்டு வருகின்றது. எனவே, நுட்பமான இந்த உணர்வினைச் செப்பமாகப் படம் பிடித்தல் மிகமிகத் தேவையானதாகும். ''நான் நெகிழ்ந்து போனேன்'' என்று சொல்கின்ற வழக்கமும் இருக்கின்ற தல்லவா. எனவே, இதனை ''நெஞ்சறிநெகிழ்வு'' என்னும் செஞ்சொற்களால் நிறைவு செய்யலாமே!

கண்ணொடு கண்இணை நோக்குஒக்கின், வாய்ச்சொற்கள்
என்ன பயனும் இல. (குறள்.1100)

❖ ❖ ❖

Share Auto - பகிர்வுத்தானி

நான் அண்மையில் நெஞ்சையள்ளும் தஞ்சை மாநகருக்குச் சென்றேன். அந்நகரில் சீருந்து ஒன்றில் பயணம் செய்தபோது, எங்களுக்கு முன்னால் வேறு ஒரு வண்டி சென்றுகொண்டிருந்தது. அதன் பின்பகுதியில், ''பிரயாணிகள் வாகனம்'' என்று எழுதப்பட்டிருந்தது. ஒன்றும் புரியவில்லை. அந்த வண்டி ஓரிடத்தில் சென்று நின்றபோது, முன்பக்கம் சென்று பார்த்தோம். அது ஒரு Share Auto என்று தெரிந்து கொண்டோம்.

என்னே! வியப்பு! இந்த வண்டியின் பெயரைப் ''பகிர்வுத் தானி'' என்று மொழிபெயர்த்துள்ளோம். தமிழ் நாட்டரசின் தமிழ் வளர்ச்சித்துறை இந்தப் பெயரை ஏற்று விளம்பரப்படுத்தியுள்ளது.

''பிரயாணிகள் வாகனம்'' தமிழாக இல்லையே! போகட்டும். புதிய பெயர் எவ்வாறு வந்தது என்பதை எண்ணிப் பார்த்தால் தெரியும். ஆட்டோ என்பதற்குத் ''தானி'' என்னும் பெயர் ஏற்கெனவே நன்கு பழகி விட்டது.

தானியில் சென்றால் செலவு அதிகம் பிடிக்கும். எனவே, செலவைப் பகிர்ந்து கொள்ளும் பாங்காகப் புதிய பெயர் பிறந்துள்ளது. ''பகிர்வுத் தானி'' ''பகிர்வுத் தாணி'' என்று பாரெங்கும் முழங்கலாமே!

மனைத்தக்க மாண்பு உடையள் ஆகித்
தற்கொண்டான்
வளத்தக்காள் வாழ்க்கைத் துணை. (குறள்.51)

❖ ❖ ❖

Snag - இடர்ப்பாடு

நான் சட்டத்துறை அறிஞர் ஒருவருடன் கலந்து பேசுவதற்காகச் சென்றபோது, அவர் ‘‘இதில் ஒரு Snag இருக்கிறது’’ என்று குறிப்பிட்டார். இந்தச் சொல்லிற்குச் சரியான பொருள் என்ன என்று ஆராய்ந்து பார்த்தால், இடர்ப்பாடு, குறைபாடு, சிக்கல் என்னும் பொருள்கள் கிடைக்கின்றன. இதில் உள்ள இடர்ப்பாட்டை நீக்கும் பொருட்டு இடர்ப்பாடு என்னும் சொல்லையே இடர்ப் பாடின்றி இயம்பலாமே!

மனைமாட்சி இல்லாள்கண் இல்ஆயின் வாழ்க்கை
எனை மாட்சித்து ஆயினும் இல். (குறள்.52)

❖ ❖ ❖

Speed Breaker - தடைமேடு

Speed Limit என்னும் தொடரை "வேகத்தடை" என்று நாம் எழுதி வைத்துள்ளோம். அவ்வாறாயின் Speed Breaker என்னும் தொடருக்குப் பொருத்தமான ஒரு மொழிபெயர்ப்பை நாம் காணவேண்டும். வேறு சூழ்நிலைகளில், தடுப்பு வேலி, தடுப்புச் சுவர்போன்ற பெயர்களை நாம் பயன்படுத்தி வருகின்றோம். அந்த முறையில் அமைந்ததன்று Speed Breaker வேகத்தைத் தடுப்பதற்கான குறைப்பதற்கான ஏற்பாடுகள் இது. குறுக்கே ஒரு மேட்டினை அமைத்து, வேகத்தைக் குறைக்கிறோம். எனவே இதனைத் "தடைமேடு" என்று தடையின்றிக் கூறலாமே!

பெண்ணின் பெருந்தக்க யாஉள கற்புஎன்னும்
திண்மை உண்டாகப் பெறின். (குறள்.54)

❖ ❖ ❖

Stapler - கம்பித் தைப்பி

தாள்களை உறுதியாக இணைக்க நேரும்போது, உரிய கருவியில் கம்பிச் சுருளைப் பொருத்தி, தைக்க முனைகின்றோம். இந்தக் கருவியை Stapler என்று ஆங்கிலத்தில் கூறுவார்கள். இதனை அழகு தமிழில் ''கம்பித் தைப்பி'' என்று கனிவாகக் கூறலாமே! ''கம்பித்தைப்பு செய்யுங்கள்'' என்று சொல்லிப் பார்த்தால், தமிழின் கதவுகள் தங்கமயமாகுமன்றோ!

இல்லதுஎன் இல்லவள் மாண்புஆனால்
உள்ளதுஎன்
இல்லவள் மாணாக் கடை. (குறள்.53)

❖ ❖ ❖

Transaction - செயல்வினை

அலுவலகங்களில் Official Transaction என்னும் தொடர் அடிக்கடி பயன்படுத்தப்படுகின்றது. இதற்கு, ''உரிய பணிகளை நடத்துதல்'' அல்லது ''செய்து முடித்தல்'' என்று பொருள் கூறலாம். அலுவலக நடவடிக்கையாக இருக்கின்ற காரணத்தால், இதற்குப் பொருத்தமான மொழிபெயர்ப்பை நாம் காணவேண்டும். ஈண்டு, ''செயல்களைச் செய்து முடித்தல்'' என்னும் பொருள் விளங்கித் தோன்றவேண்டும். செய்யப்படும் வினைதானே செயல்வினை. அவ்வாறாயின் Transaction என்பதைச் ''செயல்வினை'' என்று செப்பி மகிழலாமே!

தெய்வம் தொழாஅள் கொழுநன்
தொழுதுஎழுவாள்
பெய்எனப் பெய்யும் மழை. (குறள்.55)

Visitor's Gallery - காண்போர் மாடம்

நம்மைக் காண்பதற்கு ஒருவர் வருகிறார். அவரை Visitor என்கிறோம். Gallery என்று ஒரு சொல் இருக்கின்றதல்லவா? இதனைப் ''படிமேடை'' என்று சொல்கிறோம். அவ்வாறாயின், Visitor's Gallery என்பது என்ன? இரண்டை யும் ஒட்டவைத்தால், அதாவது, ''காண வருபவர் படிமேடை'' என்று கூறினால், அவை ஒட்டவே ஒட்டமாட்டா. சென்னைத் துறைமுகத்தில் வந்து தங்குகின்ற கப்பல்களைத் தொலைவிலிருந்து காண் பதற்கு வசதியாக, Visitor's Gallery கட்டியிருந்தார்கள். உயரமான இடத்திலிருந்து வசதியாகப் பார்ப்பதற்கு இது வாய்ப்பாக அமைந்தது. சட்டப் பேரவையிலும் Visitor's Gallery இருக்கிறது. இவற்றை எந்தப் பெயரிட்டு அழைப்பது, கண் கவர் மாடமாக இருக்கும் இதனைக் ''காண்போர் மாடம்'' என்று அமைத்துக் கொண்டால், கருத்துச் செறிவுடன், கவிதை மணமும் பரப்புமல்லவா?

தற்காத்துத் தற்கொண்டான் பேணித் தகைசான்ற
சொற்காத்துச் சோர்வுஇலாள் பெண். (குறள்.56)

❖ ❖ ❖

தமிழ்த் தொண்டர் கோ. முத்துப்பிள்ளை
திருமதி. யோகாம்பாள் முத்துப்பிள்ளை
அவர்களின் மரபினர்

திருமதி. மணிக்கொடி பாலசுப்பிரமணியன்
திருமதி. ஞானாம்பாள் கோவிந்தசாமி
திருமதி. தங்கம் தேவராசன்

மன்றப் புரவலர்கள்

நாவேந்தர், டாக்டர். வே. ப. நாராயணன்

முத்தமிழ்க் காவலர் கூ. குருமூர்த்தி

செந்தமிழ்ப் புரவலர் இ. சந்தானம்

செந்தமிழ்ப் புரவலர் அ. ச. கௌரிசங்கர்

செந்தமிழ்ப் புரவலர் கெ. நித்தியானந்தம்

வள்ளுவ மாமணி, புலவர்
என். இ. இராமலிங்கனார்

மாசறு புரவலர் வீ.காசி

கலைமாமணி கவிவேந்தர் க. வேழவேந்தன்

செவாலியர் டாக்டர் வி. ஜி. சந்தோசம்

சொல்லழகர் டாக்டர் வி. ஜி. செல்வராஜ்

மன்ற முன்னோடிகள்

நற்றமிழ்க் கவிஞர் நா. பாபு

ஆட்சித்துறை அறிஞர் கா.மு. ஆதிகேசவன்

அறிவியல் அறிஞர் புலவர் மு. வெங்கடேசன்

பைந்தமிழ்ச் செல்வர் பெ. கி. தனசேகரன்

கலைமணி நா. இரவிசங்கர்

முத்தமிழ்க் கவிஞர் எம். தாமசு இராசேந்திரன்

சிலேடைச் செம்மல் தி.ரா.தி. அமிர்தலிங்கம்

முத்தமிழ்மணி மு. மணி

பழந்தமிழ்ப் புலவர் த. பரமசிவன்

மக்கள் தலைவர் திருமதி மங்களம் சம்பத்

நெறியியல் அறிஞர் எஸ். எஸ். பெருமாள்

வண்டமிழறிஞர் வ. பாலசுப்பிரமணியன்

மாண்புச்செல்வர் தி.வி. மாதவன்

மொழிக்காவலர் கோ. முன்னேற்றம்

பொதுநலப் போர்முரசு மு.சு. மணியம்

செந்தமிழ் அறிஞர் சு. நாகலிங்கம்

மருத்துவமாமணி டாக்டர்
விட்டோபாய் மணியம்

செந்தமிழ்ச் சீரனார் மு. சிவலிங்கனார்

தமிழ்ப் பெரும்புலவர் ப. கோவிந்தசாமி

வெற்றிமுரசு பி. ஏ. ஆர். வில்லியம்ஸ்

செந்தமிழ் அரசி புலவர் டோரா ஜெயமணி

கவியரசி செயமணிபால்

இன்னிசைப் புலவர் கா. ச. கசேந்திரன்

புலவர்க்கரசன் புலவர் பொன்னரசன்

கவிஞர்கோமகன் சொ. சுப்பையா செட்டியார்

இன்றமிழ்க் கவிஞர் சி. தெ. இளமுருகன்

கனி தமிழ்ச்செல்வர் கோ. கஞ்சமலை

செந்தமிழ்க் கவிஞர் செ. கதிரவன்

வல்வில்ஓரி பா. கிருட்டிணமூர்த்தி

அருந்தமிழ்ப் புரவலர்
நெல்லை ஈ.எம். அனீஃபா

சொல்லின் செல்வர் பேராசிரியர்
மு. கோவிந்தராசன்

சங்கச் சான்றோர் உ. சாலமோன்

பைந்தமிழ்ச் செல்வர் பால்பெருமாள்

பல்கலைக் கவனகர் கலை. செழியன்

விரல்பதிவுக் கலைஞர் அ. சரவணபவன்

வெற்றிச்செல்வர் ஜெ. சி.விசயரங்கன்

பைந்தமிழ்ச் செல்வர் ப. புருடோத்தமன்

செந்தமிழ்ச் செல்வி திருமதி. சு. கீதாலெட்சுமி

பொறியியல் அறிஞர் ஆ. சக்திவேலு

பொறியியல் அறிஞர் கி. இராசாராம்

செந்தமிழ்ச் செல்வர் எஸ். லூர்து பிரகாசம்

பொறியியல் அறிஞர் பா. எழில்அரசு

அருந்தமிழ்ச் செல்வர் தா. ஆரோக்கியம் ஜார்ஜ்

இன்சொற் களஞ்சியம் எஸ். இராமசாமி

செந்தமிழ்ச் செயல்வீரர் செ. செல்வசேகரன்

அருந்தமிழ்க்காவலர் அ. மருதப்ப பாண்டியன்

தேன்தமிழ்ச் செல்வர் வி. என். திருநாவுக்கரசு

சங்கத்தமிழ்ச் செல்வர் புலவர் இளஞ்சேரல்

செந்தமிழ்ச் செல்வி திருமதி எல். சந்திரா

மொழியரசி முனைவர் திருமதி. நிர்மலா
பழனிவேலு

செந்தமிழ்க் குமரர் ச. குமார்

செந்தமிழ்ச் செல்வர் பொ. முருகேசன்

செந்தமிழ்ச் செல்வர் மு. பலராமன்

செந்தமிழ்ச் செல்வர் சு. மதிவாணன்

முத்தமிழ்க் கவிஞர் சொர்ணபாரதி

சொல்லாக்க வித்தகர் முனைவர்

மு. முத்துவேலு

பாரதி நகர் பாரதி பா. ரா. நாகராசன்

தெய்வஅன்னை மீனாம்பாள் கைலாசம்

செந்தமிழ்ச் செல்வர் செ. சாமுடி

நன்னெறிச் செல்வர் ஜி. எஸ். மணி

விளையாட்டு வீரர் கோ. வெற்றிச்செல்வன்

கல்வித்துறை பேரொளி

டாக்டர் சி. பழனிவேலு

❖ ❖ ❖

ஆட்சி மொழி அறிஞர் தமிழ்த்தொண்டர்

கோ. முத்துப்பிள்ளை

இயற்றியுள்ள நூல்கள்

1. ஆட்சிமொழி அருஞ்சொற்கள்
2. அரியணையில் அழகு தமிழ்
3. அன்னை மொழியும் ஆட்சித் துறையும்
4. ஆட்சி மொழிச் சிந்தனைகள்
5. மொழிபெயர்ப்பு வேடிக்கைகள்
6. தமிழறிவோம்
7. கவினார்ந்த கலைச்சொற்கள்
8. முத்தமிழ் ஆய்வு மன்ற முழுமணிச் சொற்கள்

கவிப்பேரரசு **வைரமுத்து** அவர்கள்

வழங்கிய பாராட்டு

செம்மையில் கனிந்த பிள்ளை
செந்தமிழ் வீட்டுப் பிள்ளை
தம்மையே நினைத்த தில்லை
தமிழையே நினைத்த பிள்ளை
உண்மையில் முத்துப் பிள்ளை
உலகுக்கே பிள்ளை; யானும்
இம்மையில் பெற்ற பெட்பு
இவருடன் உற்ற நட்பு.

இப்படிக்கு,

பிள்ளையின் பிள்ளை

இரா. வைரமுத்து